பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**21 12 2025 SUNDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

2. மின்சார வாகனங்களின் பயன்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தகவல் தொழில்நுட்பத்துறையில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. விளம்பரம் செய்வதில் மட்டுமே திமுக அரசு கவனம் செலுத்துவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்க மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவிற்கு ஒப்பதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்திற்கு மாற்றாக இந்த சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்த சட்டம் வரவேற்கத்தக்கது என்றும், பல்வேறு முக்கிய அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளதாகவும் மூத்த பத்திரிகையாளர் திரு வெங்கடேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — வெங்கடேஷ் - 63 Sec.)***

*<<<<<>>>>>>*

மின்சார வாகனங்களின் பயன்பாட்டிற்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் மின்சார வாகன கண்காட்சியில் பங்கேற்ற பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மின்சார வாகனங்களை இயக்குவது எளிமையானது என்றும் அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதிப்பை தடுப்பதற்கும் இந்த வாகனங்கள் உதவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மின்சார வாகனங்களின் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கப்படுவதன் காரணமாக, இளம் தொழில்முனைவோர் இந்த துறையில் உருவாவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் வழிகாட்டுக்குழு கூட்டம் மத்திய அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் தலைமையில் இன்று கொல்கத்தாவில் நடைபெற்றது.

புலிகள் மற்றும் யானைகள் பாதுகாப்பு குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளில் தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

தகவல் தொழில்நுட்பத்துறையில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா கூறியுள்ளார்.

மதுரை மாட்டுத்தாவணி அருகே கட்டப்பட்டுவரும் தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்கான கட்டுமானப் பணிகளை இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

***(Sound Byte — டி ஆர் பி ராஜா - 37 Sec. )***

<<<<<>>>>>>

விளம்பரம் செய்வதில் மட்டுமே திமுக அரசு கவனம் செலுத்துவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், தேர்தலை கருத்தில்கொண்டே விளம்பரத்திற்காக திட்டங்கள் தொடங்கிவைக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

பொருநையை போற்றுகிறேன் எனும் போர்வையில் ஃபோட்டோ சூட்டில் மட்டுமே முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் ஆர்வம் காட்டுவதாகவும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

செவிலியர்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்கள் கோரிக்கைகளை திமுக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு தொல். திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு அருகே செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு ஊழியர்களின் கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டத்தையும் விரைந்து நிறைவேற்ற திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி கன்னியாகுமரி மாவட்டத்தில் கேக் தயாரிக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

அனைத்துத் தரப்பு மக்களும் இதனை ஆர்வத்துடன் வாங்கி செல்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — குமார் - 34 Sec.)***

<<<<<>>>>>>

குழந்தைகளின் படைப்பாற்றலை மேம்படுத்தும் வகையில், மர பொம்மைகளை உருவாக்கும் போட்டி சேலத்தில் நடைபெற்றது.

சிறு பொம்மைகள், மர அலமாரி என இரு பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியில், குழந்தைகள் ஆர்வத்துடன் பங்கேற்றதாக இதன் ஒருங்கிணைப்பாளர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Voice Byte — காவியா - 40 Sec. )***

இது தமக்கு மகிழ்ச்சி அளித்ததாக இதில் பங்கேற்ற மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

***<u>(Sound Byte — பற்கேற்பாளர்கள் - 36 Sec. )</u>***

<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ''அமைதியான வாசிப்பு'' இயக்கத்தினை ஆட்சியர் திரு மணீஷ் நாரணவரே தொடங்கிவைத்தார்.

------------------

சர்வதேச தியான தினத்தையொட்டி, விழுப்புரத்தில் உள்ள ராமகிருஷ்ணா மடத்தில் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான தியான பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

---------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் காரில் போதைப்பொருள் கடத்திய நான்கு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Meiraba Luwang Maisnam** தங்கப்பதக்கத்தையும், **Numair Shaik** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் நிரஞ்சன் நந்தகுமார் — ரத்ன சபாபதி இணை **21-19, 21-12** என்ற செட் கணக்கில், வியட்நாமின் **Hoang Kha Tran — Khac Dang Khanh Dang** இணையை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

மகளிர் ஒற்றையர் பிரிவில், **Tanvi Reddy Andluri** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

----------------------

இந்தியா — இலங்கை இடையேயான முதலாவது மகளிர் டுவெண்டி — டுடிவன்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

**<<<<<END>>>>>>**